# 03 படைப்புகளும் பொறுப்புள்ள சமூகங்களும்


**வாசிப்போம்:**
*திருப்பாடல்கள் 65: 9-13; 104*
*யோபு 31:38-40*
*இணைச்சட்டம் 32:13-14*
*மலாக்கி 2:10*

மனித சமுதாயத்தின் வாழ்வு சிறப்பாகவும், ஆசீர்வாதமாகவும் அமைய கடவுள் படைப்புகளை நமக்கு வழங்கி, நம்மைப் பராமரித்து வருகிறார். தரம் 7 கிறிஸ்தவப் பாடநூலில் உயிரினங்கள் வாழ்வதற்கான ஏற்ற சூழலை ஏற்படுத்திய கடவுளின் அன்பின் வெளிப்பாடான படைப்புகளைப் பற்றி கற்றோம்.

திருப்பாடல்கள் 65 ,104 இல் கடவுளின் படைப்புகள் எவ்வாறு சமூகங்களின் இருப்புக்கும், சமூக உறவுகளுக்கும் அவசியமாகின்றன என்பதைப் பார்க்கின்றோம்.

## சமூகங்கள் கடவுளின் படைப்புக்களால் பராமரிக்கப்படுகின்றன

"பூவுலகின் முகடுகளில் அவனை வாழச்செய்தார்; வயல் வெளியின் விளைச்சலை அவன் உண்டான்; கன்மலைத் தேனை அவன் சுவைத்தான்; கற்பாறை எண்ணெயையும், ஆட்டின் பாலையும், பாசானில் மேயும் செம்மறிக்கிடாய், வெள்ளாட்டுக்கிடாய், இவற்றின் கொழுப்பையும், கொழுமையான கோதுமையையும், இரத்தம் போன்ற முந்திரிகைச்சாற்றையும் அவர்கள் உண்ணும்படி, ஆண்டவர் கொடுத்தார்" (இணைச்சட்டம் 32:13-14)



மாண்பையும், மாட்சியையும் அணிந்துள்ள கடவுள் பூவுலகை அடித்தளத்தில் அசைவுறாது நிலை நாட்டினார். ஆழ்கடலுக்கு எல்லை வகுத்து, பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளைச் சுரக்கச் செய்கிறார். நீரூற்றுகளினால் விலங்குகளின் தாகத்தைத் தீர்த்து, மானிடருக்கு பயிர்வகையையும், கால் நடைகளுக்கு புல்லையும் முளைக்கச் செய்து, உணவு கிடைக்கச்செய்கிறார். இருளைத் தோன்றச்செய்து, மானிடர் துயிலவும், காட்டு விலங்குகள் இரை



இலவச விநியோகத்திற்காக

தேடவும் வழிவகுக்கிறார். கதிரவன் எழும்போது மானிடர் வேலைக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். கடல்வாழ், தரைவாழ் விலங்குகளிலிருந்து மானிடர் உணவு பெறவும், நிலத்திலிருந்து கனிய எண்ணெய் பெற்று சக்தியைப் பயன்படுத்தவும், அனைத்தையும் ஞானத்தோடு கடவுள் செய்தார்.

## பொறுப்புடன் படைப்புகளைப் பராமரிக்கக் கடவுள் சமூகங்களை அழைக்கிறார்

கடவுள், மனிதர்களுக்கு பூமியை ஆளுவதற்கு அதிகரத்ததையும், அவற்றை விவேகத்துடன் பராமரித்துப் பாதுகாப்பதற்கும் பொறுப்பையும் கொடுத்துள்ளார்.

திருவிவிலியத்தில் கடவுள் இஸ்ரயேல் சமுதாயத்தை மாதிரிச் சமுதாயமாக வாழ அழைத்தார். இந்த அழைப்பில் கடவுளின் படைப்பை அவர்கள் பராமரித்து பாதுகாக்கும் உத்தரவாதமும் அடங்கியிருந்தது.



கடவுள் இஸ்ரயேல் சமுதாயத்துக்கு கூறியதாவது, “நீங்கள் வாழும் நாட்டை, நீங்கள் கறைப்படுத்தவே கூடாது. நான் அதன் நடுவில் வாழ்கிறேன்: நானே இஸ்ரயேல் மக்கள் நடுவில் வாழும் ஆண்டவர்” (எண்ணிக்கை 35:34).

இஸ்ரயேல் சமுகத்தைப் போலவே, கடவுளின் படைப்பின் ஆசீர்வாதத்தை அனுபவிக்கும் நம் அனைவரையும், நற்சமூகமாக இணைந்து, படைப்புகளைப் பொறுப்புடன் பராமரிக்க கடவுள் அழைக்கிறார்.

## படைப்பு பராமரிப்பின்போது சமூகம் சவால்களுக்கு முகம் கொடுக்கிறது

சமூகமானது படைப்பு பராமரிப்பில் ஈடுபடும்போது, கடவுளின் மகிமைக்காகவும் மனிதநலனுக்காவும் படைப்பை விருத்தி செய்து, எதிர்கால சந்ததிக்கு வழங்க கடமைப்பட்டுள்ளது. இதனால் சமுகங்கள் புதிய பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது.

சமூகங்களின் உணவு பற்றாக்குறைத் தீர்வுக்கும், வதிவிட நெருக்கடியைக் குறைக்கவும், காடுகளில் பெருமளவு மரங்கள் வெட்டப்படுகின்றன. ஆனால் மரங்கள் மீள நாட்டப்படுவதில்லை. சமுகத்தின் பொருளாதார விருத்திக்காக

படைப்பு, பாதுகாப்பைக் குறித்து கரிசனையற்ற, திட்டமிடப்படாத தொழிற்சாலைகளும், சக்தி விரயமும், திரவ வாயு நச்சுக்கழிவு வெளியேற்றமும், வள விரயங்களும் சூழலை மாசடையச் செய்கின்றன. இவற்றின் விளைவாக புவி வெப்பநிலை உயர்வு, காலநிலை மாற்றங்கள் போன்ற பல தீய விளைவுகளை படைப்பு எதிர்நோக்குகிறது. இதற்கான காரணம் என்ன? சமூகங்கள், கடவுளின் படைப்புகளைப் பராமரிப்பதற்கும் அவற்றுக்குரிய மதிப்பையும் வழங்காத் தவறியமையாகும். அத்துடன் எதிர்காலச் சந்ததியினரைக் குறித்து கரிசனையின்மையும் ஆகும்.

இயற்கைப்படைப்புகளை, சமூகங்கள் சுய இலாப நோக்குடன் பாவிப்பதாலும், ஆடம்பர வாழ்க்கை முறைகளாலும், சமூகங்களாலும் கடவுளின் படைப்பு பராமரிப்புக் கட்டளையை மீறுகின்றன. புவி சமூகங்களின் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்யக் கூடியவாறு ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் பேராசையை நிறைவேற்றுவதற்கன்று. மனிதர்களின் பேராசையை நிறைவேற்றுவதகன்று அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கே புவி ஆசிர்வதிக்கப்பட்டுள்ளது. திருவிவிலியம் நமது சமுகத்தை நோக்கி இவ்வாறு வினவுகின்றது:

"நம் அனைவர்க்கும் தந்தை ஒருவரன்றோ? நம்மைப் படைத்தவர் ஒரே கடவுளன்றோ? பின்னர் ஏன் நாம் ஒருவருக்கொருவர் நம்பிக்கைத் துரோகம் செய்கின்றோம்? நம் மூதாதையரின் உடன்படிக்கையை ஏன் களங்கப்படுத்துகிறோம்?"

மலாக்கி 2:10

## படைப்பு பராமரிப்பில் சமூகப்பாரம்பரியங்களும் மரபுகளும்

இஸ்ரயேல் சமூகத்திற்கு ஏழாவது வருடத்தை ஆண்டவருக்காக ஓய்ந்திருக்கும் ஆண்டு எனகடவுள் கட்டளையிட்டார். இதன்படி, வயலைப்பயிரிடாமலும், திராட்சைச் செடிகளிலிருந்து பழம் சேர்க்காமலும், தானாய் விளைந்த பயிரை அறுக்காமல் தவிர்த்து, அதனை வீட்டு, காட்டு விலங்குகளுக்கு உணவாகும்படி விட்டார்கள். நிலத்துக்கு இவ்வாறு ஓய்வு அளித்து புதுப்பித்தல், சூழற்றொகுதியின் நீதிநெறிக்கும், மனிதருக்கும், படைப்புகளுக்குமிடையே உள்ள சரியான உறவுக்கும் எடுத்துகாட்டாகும்.

இஸ்ரயேல் சமூகம் போன்றே, நமது சமூகத்துக்கும் இயற்கையுடன் இணைந்த, நல்ல மரபுகள் உண்டு. தமிழ் பெண்கள் அரிசிமா கோலமிடும்போது, எறும்புகளுக்கும் உணவு வழங்கிப் படைப்புப் பராமரிப்பில் ஈடுபடுகின்றனர்.


இலங்கை உழவர்கள் நெல் வயலில் ஒரு பகுதியை அரிவு வெட்டுவதைத் தவிர்த்து குருவிகளுக்கு உணவு கிடைக்கும்படி விட்டுவிடுவதும் ஒரு மரபுமுறைச் செயலாகும்.



## சமூகவிழிப்புணர்வை ஏற்படுத்துவோம்

சமூகமாக நாம் அதிகளவு ஆசீர்வா தங்களைப் படைப்பிலிருந்து பெறுகிறோம். இதற்கு பிரதியீடாக, நமது வாழ்நாட்களில் படைப்பினைப் பாதுகாத்து, பராமரித்து, பின்வரும் சந்ததியினருக்கு கையளித்தல் வேண்டும். இன்று பொருளாதார அபிவிருத்தியை மட்டும் நோக்காகக்கொண்டு, சுயநல இலாபத்துக்காக உழைக்கும் சமூகத்தினரால் சூழலில் தீய விளைவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்செயற்பாட்டால் மனித சமூதாயத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாகவுள்ளது. எதிர்காலச் சந்ததியின் வாழ்வுக்காகவும், படைப்பின் பராமரிப்புக்காகவும் சமூகங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுவது, இன்றைய அவசரத்தேவையாகும்.

எளிமையாக வாழ்ந்து சுயநல நோக்குடன் தேவைக்கதிகமாகப் படைப்புகளை நுகரும் மனப்பாங்கை மாற்றி, தேவையான அளவை மாத்திரம் பாவித்து, கடவுளுக்கும் மனுக்குலத்துக்கும் படைப்புப் பணியாளராகுவோம். படைப்புப் பராமரிப்பு பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். படைப்புப் பராமரிப்பு இயக்கங்களை சமூகத்தில் ஏற்படுத்தி, இன்றைய சமூகத்தின் கடமைகளைத் தெரிவிப்போம்.



## தீர்மானிப்போம்

- *சமூகமாக படைப்புகளைக் பராமரிப்பதற்கு முக்கியத்துவம் அளிப்போம்.*
- *படைப்புகளை அழிப்போரைத் தடுப்பதில் ஈடுபடுவோம்.*
- *படைப்பு - பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் செயற்படுவோம்.*



## நினைவில் வைத்திருப்போம்

- சமூகங்களின் வாழ்வு சிறக்கவும், சமூகங்களின் இருப்புக்கும் சமூக உறவுகளுக்கும் அவசியமான படைப்புகளை அளித்து கடவுள் நம்மை பராமரிக்கிறார்.
- படைப்புகளை பொறுப்புடன் பராமரிக்க, கடவுள் சமூகங்களை அழைக்கிறார்.
- படைப்பு - பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் செயற்படுவோம்.
- படைப்பு - பராமரிப்பானது, சமூகங்களின் மரபுகள் பாரம்பரியங்களுடன் தொடர்புபட்டது.
- சமூகங்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு படைப்புப் பராமரிப்பில் ஈடுபடலும், அது தொடர்பான விழிப்புணர்வு இயக்கங்களை ஏற்படுத்துவதும் சமூகத்தின் கடமையாகும்.

## செயற்பாடு

*1.* i. நீர் வாழும் பிரதேசத்தில் நிகழும் படைப்புகளின் அழிவுக்கான பொறுப்பற்ற செயற்பாடுகள் சிலவற்றை இனம் காண்க.

ii. இச்செயற்பாடுகள் தொடர்பான, சமூக எதிர்கால வாழ்வை மனதிற்கொண்டு, படைப்புப் பராமரிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, ஒன்றிணைந்த சமுதாயமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்வைக்க.

*2.* ‘‘கடவுளின் படைப்புக்களைப் பராமரித்தலில் சமூகத்தின் பங்கு” என்னும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகை ஒன்றை, குழுவாகத் தயாரியுங்கள். இதில் கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், துண்டுபிரசுரங்கள், கேலிச்சித்திரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிக் காட்சிப்படுத்துங்கள்.

*3.* உமது பாடசாலைச் சமூகத்தில் உலக சுற்றாடல் தினம் அல்லது புவித்தினத்தை எவ்வாறு கொண்டாடுவீரெனக் குழுவாகச் சேர்ந்து திட்டம் தயாரிக்கவும்.

***4. திருப்பாடல் 104 வாசித்து கீறிட்ட இடங்களை நிரப்புக.***

- ★ *என் கடவுளாகிய ஆண்டவரே நீர் எத்துணை .......................... நீர்.............. ..................... ....................... அணிந்துள்ளவர்.*

- ★ *நீவீர் ............ அதன் அடித்தளத்தின் மீது நிலை நாட்டினீர். அது என்றென்றும் .................... அதனை ................. ஆடையென மூடியிருந்தது.*

- ★ *அது மீறிச்செல்லாதவாறு அதற்கு ............... வகுத்தீர். .....................அது மீண்டும் மூடிவிடாதபடி செய்தீர்.*

- ★ *பள்ளத்தாக்குகளில் ................... சுரக்கச் செய்கின்றீர். அவை காட்டு ..................... அனைத்திற்கும் .......................... தரும். .......................... தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும். .......................... அருகில் .............. கூடு கட்டிக்கொள்கின்றன.*